**இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரி - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
நிதிக்கூற்றுக்கள் கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்து தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் | கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வினால் கல்லூரியின் உள்ளகக் | 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 134(3) | கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக கல்லூரியும் உள்ளகக் கண்காய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டி மற்றும் அரசாங்க பொது முயற்சிகளுக்கு சொந்தமான (SOEs) இற்கான செயற்பாட்டு கைநூல் | | | |
| (i) | 4.2 (ஏ) பிரிவு | ஏதாவது வருடம் ஒன்றில் ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்த வேண்டியருந்த போதிலும் மீளாய்வாண்டில் கல்லூரியால் அவ்வாறான கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு குழுக்கூட்டம் உரிய பிரகாரம் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 6.6 ஆம் பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கையும் உள்ளடக்கி ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் சபையில் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றத்திற்கு | எதிர்காலத்தில் ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டறிக்கை குறித்துரைத்த கால எல்லையில் பாராளுமன்றத்தின் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 35,500,266 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 30,291,210 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,209,056 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சேவை செலவினம், பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்லூரியின் கைநூலின் பிரகாரம் நிறைவேற்றவேண்டிய 19 பணிகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழக கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 08 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் அதில் 07 பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | தற்போது காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக அந்த செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்துதல் மிகவும் வசதியீனமாக இருந்த போதிலும் இந்த ஆண்டிலிருந்து அதற்குரிய சில நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கல்லூரியால் நிறைவேற்ற வேண்டிய சகல பணிகளையும் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015/2018, 2016/2019, 2017/2020 மற்றும் 2018/2021 தொகுதிகளுக்குரிய பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 127, 218, 245 மற்றும் 237 ஆக | இந்த மாணவர் தொகுதிகள் மாணவர் ஒருவருக்கு பாடநெறியில் முதலாவது சந்தர்ப்பத்தின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருக்குமாயின் | மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் சென்றதன் காரணமாக விட்டுச் செல்வதற்கான காரணங்களைக் கண்டறிந்து |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் அதனிடையே பாடநெறிகளை பூர்த்தி செய்யாமல் இடைநடுவில் விட்டுச்சென்ற மாணவர்களின் எண்ணிக்கை முறையே 11, 45, 69 மற்றும் 99 ஆக தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. அந்த நிலைமையைக் குறைத்து மாணவர்களை கல்லரியில் நிறுத்தி வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்க வில்லை. | அடுத்த ஆண்டின் போது பாடநெறியை பூர்த்தி செய்ய முடியுமாக உள்ளதுடன் அதன் பிரகாரம் பாடநெறிகளை பூர்த்தி செய்த சதவீதம் பல்வேறு வகையில் இருந்தது. | அவற்றுக்குத் தேவையான தீர்வினை வழங்கி மாணவர்கள் பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்காக அவர்களை நிறுத்தி வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற 16 பரீட்சைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது மாணவர்கள் பரீட்சைக்காக விண்ணப்பித்து அதற்காக பங்குபற்றாமல் மற்றும் உரிய பணிக்கையளித்தல் பூர்த்தி செய்யப்படாமை 32 சதவீதம் முதல் 68 சதவீதம் வரை உயர்ந்த வீச்சில் காணப்பட்டது. இந்த நிலைமையைக் குறைத்து உரிய பிரகாரம் உரிய பரீட்சைகளை பூர்த்தி செய்வதற்காக மாணவர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் போதியளவான கவனம் முகாமைத்துவத்தால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சில மொடியூல்களுக்குரிய NVQ கற்கை பாட நெறியின் பிரதான பாடத்துறைக்கு புறம்பாக பாடவிடயங்களின் பெறுபேறுகள் குறைவடைந்தமை அநேகமாக காணக்கூடியதாக இருந்தது. | பாடநெறிகளுக்குரிய எழுத்து மூல கையளித்தல்களை பூர்த்தி செய்வதற்கு மாணவர்களை ஆர்வமூட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | வெளிவாரி விரிவுரையாளர்களால் பூர்த்தி செய்யப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் போது 57 பாடங்களுக்குரிய திட்டமிடப்பட்ட மணித்தியால எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பூர்த்தி செய்யப்பட்ட மணித்தியாலங்களின் | திருத்தப்பட்ட விரிவுரை நடாத்தப்பட்ட மணித்தியால எண்ணிக்கை தொடர்பாக காண்பிக்கப்படுகின்ற திருத்தங்களின் பிரகாரம் திட்டமிடப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட மணித்தியால எண்ணிக்கைக்கு | வெளிவாரி விரிவுரையாளர்களுக் காக திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை முழுமையாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எண்ணிக்கை 50 சதவீதத்தை விட குறைவான 17 பாடங்கள் காணப்பட்டது. | இடையே வேறுபாடுகள் பல்வேறு காரணங்களால் காணப்படுகின்றது. | |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உணவுத் தொழிலநுட்ப ஆய்வுகூடத்தின் பாடநெறியை நடாத்துவதற்கு தேவயையான வசதிகள் மற்றும் காணப்படுகின்ற இடவசதிகள் போதியளவில் இல்லாமையினால் பாடநெறி நடாத்தப்படாமையின் காரணமாக அந்த ஆய்வுகூடத்தில் காணப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 2,937,996 ஆன ஆய்வுகூட உபகரணங்கள் 2015 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி 06 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | உணவு தொழில்நுட்ப பீட பாடநெறியில் ஆய்வுகூடங்களை நவீனமயப்படுத்துவதற்காக உரிய பெறுகை நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கு சில சந்தர்ப்பங்களின் போது முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் தகைமை பெற்ற விண்ணப்பதாரர் முன்வராமை மற்றும் அந்தந்த சந்தர்ப்பங்களின் போது போதியளவான நிதியேற்பாடு காணப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக அந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | தேவையான தகைமைகளை பூர்த்தி செய்த விளைவற்று காணப்படுகின்ற உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கல்லூரியின் அத்தியவசியமான 03 பதவிகள் ஆன பணிப்பாளர், உதவிப் பதிவாளர் மற்றும் உதவி நிதியாளர் காசாளர் என்ற பதவிகள் மீளாய்வாண்டின் மார்ச் மற்றும் ஒக்டோபர் மாதங்களிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக அதன் நிருவாகங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நடாத்திச் செல்வதற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | காணப்படுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக அமைச்சுக்கு அறிவித்து அந்த வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2024 சனவரி கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | அத்திவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கல்லூரியால் நடாத்திச் செல்லப்படுகின்ற தேசிய தொழிற்தகமை (NVQ Level) 05 மற்றும் 06 மட்டங்களில் ஒரு பாடநெறிக்காக ஆகக் குறைந்தது இரண்டு விரிவுரையாளர்கள் வீதம் இருக்க வேண்டியிருந்த போதிலும் கடந்த மற்றும் மீளாய்வாண்டிற்கு இடையிலான காலப்பகுதியில் 05 பாடநெறிகளுக்காக ஒரு விரிவுரையாளர் வீதம் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மின் தொழில்நுட்பவியல் பாடநெறிக்காக ஒரு விரிவுரையாளரேனும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் மூலம் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2024 சனவரியில் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதும் அற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |